**ஓராண்டுக்குள் விவசாயிகளுக்கு 2 லட்சம் இலவச மின் இணைப்பு:ஆர்க்காடு வீராசாமி**

First Published : 09 Feb 2011 01:59:25 AM IST

சென்னை, பிப். 8: விவசாயிகளுக்கு 2 லட்சம் இலவச மின் இணைப்புகள் ஓராண்டுக்குள் வழங்கப்படும் என்று மின் துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி தெரிவித்தார்.

பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் எழுப்பிய துணை கேள்வி: மின் இணைப்பு கோரி பதிவு செய்துவிட்டு 10 ஆண்டுகளுக்கும் அதிகமாகக் காத்திருக்கும் விவசாயிகளுக்கு இணைப்பு வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. மின் இணைப்புக் கோரி எத்தனை பேர் விண்ணப்பித்துள்ளனர்?

அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி: மாநிலம் முழுவதும் 5 லட்சம் விவசாயிகள் இலவச மின் இணைப்புக் கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். இவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 40 ஆயிரம் இணைப்புகள் வரை மட்டுமே வழங்க முடியும். முதல்முறையாக 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக காத்திருக்கும் 2 லட்சம் விவசாயிகளுக்கு ஓரே ஆண்டில் மின் இணைப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதோடு ஒவ்வொரு ஆண்டும் ஏற்கெனவே வழங்கி வந்த 40 ஆயிரம் மின் இணைப்புகளும் தொடர்ந்து வழங்கப்படும் என்றார் அவர். மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், தாம்பரம் தொகுதியில்தான் கடந்த 5 ஆண்டுகளில் அதிக துணைமின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றார்.

**நிறம் இழக்கும் சாயத் தொழில்!**

கோவை சதாசிவம்

First Published : 09 Feb 2011 02:03:43 AM IST

பெருவாரியான மக்களின் இதயத்துடிப்பை அதிகமாக்கி சட்டென தொற்றிக் கொள்ளும் பரபரப்பைக் கூட்டும் நீதிமன்றத் தீர்ப்புகள், அண்மைக் காலமாய் அதிகரித்துள்ளன. அப்படியான தீர்ப்புதான் திருப்பூர் சாய, சலவை ஆலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சாயம் குடித்து சாயம் குடித்து நச்சுச்சாம்பலாய் நலிந்துபோன மண்ணில் நம்பிக்கைத்துளிராய் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர் கொள்கிறார்கள் நொய்யல் ஆற்றங்கரையோரமுள்ள ஆயக்கட்டு விவசாயிகள்.

பனியன் தொழிலைச் சார்ந்து வாழும் சுமார் 4 லட்சம் பேரின் வாழ்வாதாரத்தின் மீது இறங்கிய இடியாய், தீர்ப்பு கண்டு கலங்குகிறார்கள் தொழிலாளர்கள்.

நூல் விலை உயர்வால், இந்திய ஜவுளித்தொழில் பாதிக்கப்பட்டு பரிதவிக்கும் வேளையில் ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் கோடிக்கு ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்யும் பின்னலாடை நிறுவனங்களுக்கு முதுகெலும்பாய் உள்ள திருப்பூர் சாய ஆலைகளுக்கு நேர்ந்துள்ள நெருக்கடி கண்டு அதிர்ச்சியில் உறைந்துபோய் உள்ளார்கள் ஏற்றுமதியாளர்கள்.

எதிர்பார்ப்புகளுக்கும், ஏமாற்றங்களுக்கும் இடம் கொடுக்காமல் விவசாயம், தொழில், சுற்றுப்புறச்சூழல் ஆகிய மூன்று அம்சங்களையும் கவனத்தில் கொண்டு திருப்பூர் பகுதியில் உள்ள அனைத்துப் பொது சுத்திகரிப்பு, தனி சுத்திகரிப்பு நிலையங்கள், சாயப்பட்டறைகளை உடனடியாக மூட வேண்டும். ஆலைகளின் மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டுமென உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

உலக அளவில் சாயக்கழிவுகளைக் கழித்துக்கட்டும் முழுமையான சுத்திகரிப்புத் தொழில்நுட்பம் இன்னும் வளர்ந்திடாத நிலையில், திருப்பூரில் தற்போது ஜீரோ டிஸ்சார்ஜ் சுத்திகரிப்பு முறை பின்பற்றப்படுகிறது.

இத் தொழில்நுட்பம் நான்கு தளங்களில் இயங்குகிறது.

பயோலாஜிகல்: சேகரிப்புத் தொட்டியில் சாயக்கழிவு நீருடன் மாட்டுச் சாணத்தையும், காற்றையும் சேர்த்துக் கழிவுநீரைச் சுத்திகரித்தல்.

பயோ-ரியாக்டிபயர்: கழிவுநீரைக் குழாய் மூலமாக மெமரைன் கலக்கப்பட்ட தொட்டியில் நிரப்பி வேதிவினையாக்கத்தால் சுத்திகரித்தல்.

குளோரினேஷன்: கழிவுநீரில் குளோரின் வாயுவைச் செலுத்தி முதல் கட்ட சுத்திகரிப்பில் நீரில் உள்ள நிறத்தையும், நாற்றத்தையும் கழிவுநீரின் கடினத்தன்மையையும் நீக்குதல்.

ஆர்.ஒ.சிஸ்டம் (ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ்): முதல் கட்டமாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை 40 விழுக்காடு நல்ல நீராக மாற்றி, இரண்டாம் கட்டமாக 40 விழுக்காடு நீரை நல்ல நீராக மாற்றுதல்.

எவாப்ரேட்டர் (ஆவியாக்கல்): மீதமுள்ள 20 விழுக்காடு கழிவு நீரிலுள்ள உப்புத்தன்மையையும், ரசாயன காரத்தன்மையும் நீராவியாக மாற்றும் இறுதிக்கட்ட சுத்திகரிப்புத் தொழில்நுட்பத்தில்தான் சிக்கலும், சிரமமும் ஏற்படுகிறது. எவாப்ரேட்டரில் உள்ள தொழில்நுட்பக் குறைபாடுகள் தான் உப்புத்தன்மையை முழுவதுமாய் நீக்கும் ஜீரோ டிஸ்சார்ஜ்-இல் கழிவுநீரை வெளியேற்ற முடியாமல் செய்துவிடுகிறது. அதிகச் செலவு பிடித்தும் இத்தொழில் நுட்பம் 20 விழுக்காடு ரசாயனத் திடக்கழிவை கழித்துக் கட்டமுடியாமல் திணறுகிறது. இவை சேமிக்கும் ரசாயனத் திடக்கழிவை சுத்திகரிப்பு நிறுவனங்கள் டன் கணக்கில் கொட்டிக்குவித்துள்ளன.

உற்பத்தியைப் பெருக்க மாதம் ஒருமுறையேனும் புதுரகக் கருவிகளை அறிமுகப்படுத்தும் பனியன் ஏற்றுமதியாளர்கள் நிகழ்த்தும் கண்காட்சிகளில் சாயக்கழிவை கழித்துக்கட்டும் தொழில்நுட்பக் கருவிகளைக் கண்டறிய எந்த முயற்சியிலும் ஈடுபடுவதில்லை. ஆயத்த ஆடைகளின்

உற்பத்தியைப் பெருக்க நவீன இயந்திரங்களை வாங்கி லாபத்தைக் கூட்ட, தொழிலாளர்களை வெளியேற்றி தமது வாழ்வை மட்டும் வளமாக்கிக் கொண்டார்கள்.

தேங்கிக்கிடக்கும் துணிகளுக்குச் சாயமேற்றும் அவசரத்தில் சில சாயப்பட்டறைகள் இரவு நேரத்தில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீரை நொய்யல் ஆற்றில் திறந்துவிடுகிறார்கள் என்பதுதான் விவசாயிகளின் குற்றச்சாட்டு.

பொறுப்பற்றுத் திறந்துவிடும் ரசாயனக் கழிவுநீர் விளைநிலம், நீராதாரம், நீர்சார்ந்து இயற்கை உருவாக்கி வைத்துள்ள உயிரினங்களின் வாழ்க்கையென்று ஒருதொடர் சங்கிலியான சூழல் சீர்கேடுகளுக்குக் காரணமாக உள்ளது என்பதுதான், வேளாண் மக்களின் உள்ளக்குமுறல்.

நல்லாற்று ஓடையிலும், நொய்யல் ஆற்றின் கரையோரமும் அமைந்துள்ள 100-க்கும் மேற்பட்ட சாய, சலவை ஆலைகளை 500 மீட்டர் தொலைவுக்கு அப்பால் நிறுவும் ஒரு சட்டவிதியைப் பிறப்பித்திருந்தால் இத்தகைய பாதிப்புகளை ஓரளவு தவிர்த்திருக்கலாம்.

உயர் நீதிமன்றம் தொடர்ந்து நொய்யல் ஆற்றைப் பாதுகாப்பதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துக்கு வழிகாட்டி வந்துள்ளது. ஆனால், மாசு கட்டுப்பாடு வாரியம் தமது பொறுப்பை நிறைவேற்றியிருந்தால் இந்தத் திடீர் நெருக்கடி நிகழ்ந்திருக்காது. இன்னும் பத்தாண்டுகள் கழித்து நீதிமன்ற உத்தரவு வந்திருக்குமேயானால் தமிழகப் பகுதிகளில் உள்ள பல மாவட்டங்கள் பாலைவனமாய் மாறி, நொய்யலைப் போலவே பவானி ஆறும் உருவமும், உயிரும் சிதைந்து எதன் பொருட்டும் மீட்க முடியாதபடி பாழ்பட்டுப்போயிருக்கும்.

தேசிய சுற்றுப்புறச் சூழல் நீர் ஆராய்ச்சி நிறுவனம் கடந்த அக்டோபர் மாதம் நொய்யல் ஆற்றின் வெவ்வேறு இடங்களில் ஆற்றுநீரை ஆய்வுக்கு எடுத்துப் பரிசோதித்துப் பார்க்கையில் நீரின் உப்புத் தன்மையும், ரசாயன நெடியும் அளவுக்கு அதிகமாக இருப்பது தெரியவந்தது.

திருப்பூரில் உள்ள 739 சாய, சலவை ஆலைகள் நாள் ஒன்றுக்கு 6.5 கோடி லிட்டர் தண்ணீரைப் பயன்படுத்துகின்றன. மாநகராட்சிப் பகுதிகளில் வெளியேறும் கழிவு நீராக தினமும் 4.9 கோடி லிட்டரும், பாதாள சாக்கடையில் 3.5 கோடி லிட்டர் கழிவு நீரும் நொய்யலில் கலக்கிறது.

கோவை மாநகராட்சிப் பகுதி மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இருந்தும் பலகோடி லிட்டர் சாயக்கழிவு நீரும், சாக்கடைக் கழிவு நீரும் எந்தச் சுத்திகரிப்பு விதிகளுக்கும் உள்படாமல்தான் நொய்யல் ஆற்றில் கொட்டப்படுகிறது.

இந்தியாவில் 2,100 டி.டி.எஸ். (டோட்டல் டிசால்வ்டு சாலிட்) அளவுள்ள தண்ணீர் வேளாண் தொழிலுக்கு ஏற்புடையதாக அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், தண்ணீரில் ரசாயனங்கள் படியும்போது நீரின் இயல்புத் தன்மையும், உப்புத் தன்மையும் 4,700 முதல் 5,500 வரை உயர்ந்து விடுகிறது. இந்தத் தண்ணீரை முறையாகச் சுத்திகரிக்காமல் நொய்யலில் கலக்கும் போதுதான் விளைநிலங்கள் பாழாகி, மண்ணின் நுண்ணுயிர்களும் செத்துவிடுகின்றன. நொய்யல் ஆற்றின் கரையோரம் மட்டும் 40 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் உவர்ப்பு நிலமாய் உருமாறிவிட்டதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் முறையிடுகிறார்கள்.

வேளாண் மக்களின் கோபக் குரலில் இருந்துதான், இயற்கைக்கு ஊறு விளைவிக்காத தொழில் வளர்ச்சியே நீடித்த வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்பதை உணர முடிகிறது.

கோவை, திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மாவட்டங்கள் ஜவுளித்தொழிலை நம்பியுள்ள மாவட்டங்கள் ஆகும். லட்சக்கணக்கான உழைப்பாளி மக்களின் வாழ்வாதாரமும் இதில் அடங்கியுள்ளது. வெறுமனே தொழில் வளர்ச்சியை மட்டும் கருத்தில் கொண்டு சாய, சலவை ஆலைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு என்று பலரும் பல கருத்துகளை முன் வைக்கிறார்கள்.

குறிப்பாக, அரசியல்வாதிகள் சாயக்கழிவுகளைக் கடலில் கொண்டுபோய் கலப்பதுதான் ஒரே தீர்வு என்று முழங்குகிறார்கள்.

இப்போது மட்டும் எல்லாக் கழிவுகளும் எங்கே கலக்கின்றனவாம்? ஆற்றில் கொட்டும் கழிவுகள் அனைத்தும் கடலில் தானே கலக்கின்றன. எல்லாக் கழிவுகளின் கடைசிப் புகலிடமாய் கடலே விளங்குகிறது. கடலை ஒரு பெரிய கழிப்பறையாகப் பாவிக்கும் மனோபாவம் நம்மில் பலருக்கும் உள்ளது. இதற்குச் சுற்றுச்சூழல் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாததும் ஒரு காரணம்.

கடல் என்பது இயற்கையால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய உயிர்ச்சூழல் மண்டலம். கடலிலும், கடலோரங்களிலும் ஏற்படுத்தும் மாசு, கணக்கற்ற நஷ்டங்களை நமக்கு ஏற்படுத்தும். "நீ என்ன கொடுக்கிறாயோ அது உனக்குக் கிடைக்கும்' என்ற ரமணரின் வார்த்தைகளை இயற்கையோடும் பொருத்திக் கொள்ளலாம்.

சுத்திகரித்து உப்புத் தன்மையற்ற நீரைத்தான் கடலில் கலக்கச் சொன்னோம் என்று பதிலுரைத்தாலும், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை ஏன் கடலில் கலக்க வேண்டும். திருப்பூரில் நான்காம், ஐந்தாம் குடிநீர்த் திட்டங்களுக்குக் கால்கோள்விழா நடத்தும் அளவுக்கு திருப்பூரின் புறநகர்ப் பகுதிகளில் கடும் குடிநீர்ப் பஞ்சம் நிலவும் சூழலில் சுத்திகரிக்கப்பட்ட நல்லநீரை சாய, சலவை ஆலைகளே திரும்பவும் பயன்படுத்தலாமே?

உயிர்களின் உயிராய் உள்ள நீரை ஊதாரித்தனமாக விரயம் செய்யும் உரிமை எவருக்குமில்லை. தற்போது நிலவும் நெருக்கடியைத் தீர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிப்போம்.

அதிகச் செலவு பிடித்தும், முழுமையாகச் சுத்திகரிப்பு செய்ய முடியாத தொழில்நுட்பத்துக்கு மாற்றாக, புதிய தொழில்நுட்பத்தை அல்லது ஆர்.ஓ. தொழில்நுட்பத்துக்குப் பிறகு எவாப்ரேட்டர் மற்றும் கிரிஸ்டிலைசர் பிரிவுகளில் ஏற்படும் குளறுபடிகளைக் கண்டறிந்து களைய வேண்டிய பொறுப்பு ரூ.12 ஆயிரம் கோடி அன்னியச் செலாவணியைப் பெறும் மத்திய அரசுக்கு உண்டு.

வளர்ந்த நாடுகள், வளர்முக நாடுகளின் தலையில் கொட்டிய குப்பைத் தொழில்கள் தமிழகத்தில் பல மாவட்டங்களிலும் பரவியுள்ளன. இத்தொழிலால் நெடுங்காலமாக உயிர்களின் ஆதாரமாக இருந்த நீர் நிலைகள் நிர்மூலமாகி வருகின்றன. வருங்காலத் தலைமுறையின் நிலையான வாழ்வை நெஞ்சில் தேக்கி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மத்திய, மாநில அரசுகளே

மேற்கொள்வதுதான் நிரந்தரத் தீர்வுக்கும், நீடித்த வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும். விவசாயம், தொழில், சுற்றுச்சூழல் ஆகிய அம்சங்களையும் காப்பாற்றும்.

**கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்றோரிடம் மட்டுமே நெல் கொள்முதல்: விவசாயிகள் புகார்**

First Published : 09 Feb 2011 09:06:02 AM IST

காரைக்கால், பிப். 8: காரைக்கால் மைய கூட்டுறவு விநியோக சங்கத்தில் (மார்க்கெட்டிங் சொசைட்டி) கூட்டுறவு சங்கத்தில் கடன் வாங்கியவர்களிடம் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

÷காரைக்கால் மாவட்டத்தில் மத்திய உணவுக் கழகம் (எப்.சி.ஐ.) மற்றும் காரைக்கால் மைய கூட்டுறவு விற்பனை விநியோக சங்கம் (மார்க்கெட்டிங் சொசைட்டி) ஆகியவை விவசாயிகளிடம் கடந்த ஆண்டு வரை நெல் கொள்முதல் செய்து வந்தன.

÷நிகழாண்டு எப்.சி.ஐ. சார்பில் இதுவரை நெல் கொள்முதல் தொடங்கப்படவில்லை. மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு கொள்முதல் செய்ய போதுமான நிதியின்மையால் கொள்முதல் தாமதமாக தொடங்கும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிள்ளது.

÷இதன்படி, இரு நாள்களாக திருநள்ளாறு பகுதி தென்னங்குடியில் மார்க்கெட்டிங் சொசைட்டி சார்பில் நெல் கொள்முதல் தொடங்கப்பட்டது. ஆனால், கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கிய விவசாயிகளிடம் மட்டுமே இந்த கொள்முதல் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

÷இதுகுறித்து திருநள்ளாறைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது: தண்ணீர் வரத்தில் தாமதம், இடுபொருள்கள் அரசின் சார்பில் காலத்தோடு வழங்காதது, மழை, வெள்ளத்தில் பயிர் பாதிப்பு என்ற கஷ்டங்களை கடந்து பயிர் அறுவடை செய்துள்ளோம். ஆனால், கூட்டுறவு சங்கமோ எல்லா தரப்பு விவசாயிகளிடமும் நெல் கொள்முதல் செய்யாமல், கடன் வாங்கியோரிடம் மட்டுமே கொள்முதல் செய்கிறது.÷இதனால், தனியார் வியாபாரிகளிடமும், தமிழகப் பகுதிக்கும் வாகன செலவு, தூக்குக் கூலி உள்ளிட்ட பல்வேறு செலவுகளை சுமந்து குறைந்த விலைக்கு நெல் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

÷இதுகுறித்து மார்க்கெட்டிங் சொசைட்டி தலைவர் எஸ். ஆசைத்தம்பி கூறியது: கொள்முதலுக்கு அரசிடம் தனியாக நிதி கோரப்பட்டது. இதனால், கொள்முதலில் தாமதம் ஏற்பட்டது. எங்களது கோரிக்கை நிறைவேறாத நிலையில், கூட்டுறவு சங்கங்களிடம் கடன் வாங்கியோரிடம் மட்டும் நெல் கொள்முதலை செய்கிறோம். பிற விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்ய நிதி இல்லை என்றார்.

÷அரசு தரப்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும், அறுவடை தொடர்ந்து நடந்து வருவதால், இப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**விவசாயக் கடன்: ஐ.ஓ.பி. சாதனை**

First Published : 08 Feb 2011 11:15:33 AM IST

திண்டுக்கல், பிப். 7: நடப்பாண்டில் விவசாயக் கடன் வழங்குவதில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் திண்டுக்கல் மண்டலம் இலக்கை விஞ்சி சாதனை படைத்துள்ளதாக, வங்கியின் முதுநிலை மண்டல மேலாளர் சி. அன்பு தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் கோட்டைக் கிளை திறப்பு விழாவில் கலந்துகொண்ட பிறகு, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வங்கியின் 75-வது ஆண்டு விழா வரும் 10-ம் தேதி (வியாழக்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. இந்த விழாவை நினைவு கூரும் வகையில், நாடு முழுவதிலும் 75 புதிய கிளைகள், 75 புதிய ஏ.டி.எம்.களை நிதி அமைச்சர் திறந்து வைக்க உள்ளார்.

ஐ.ஓ.பி. வங்கி வரும் 2013-ம் ஆண்டுக்குள் ரூ. 5 லட்சம் கோடி வணிகம் செய்யவும், ரூ. 5 ஆயிரம் கோடி லாபம் ஈட்டவும் இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகிறது. கரூர், திண்டுக்கல், தேனி மாவட்டங்களை உள்ளடக்கிய திண்டுக்கல் மண்டலத்தில் இதுவரை ரூ. 1,725 கோடிக்கு வணிகம் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து, இந்தாண்டு ரூ. 1,850 கோடிக்கு வணிகம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மண்டலத்தில் 47 கிளைகளுடன் செயல்பட்டு வரும் இந்த வங்கி, மேலும் 5 புதிய கிளைகளைத் திறக்க உரிமம் பெற்றுள்ளது. மாவட்டத்தில் நிலக்கோட்டை, வடமதுரை மற்றும் தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர், கரூர் மாவட்டத்தில் தளவாய்பாளையம், புன்னம்சத்திரம் ஆகிய இடங்களில் 3 மாத காலத்துக்குள் புதிய கிளைகள் திறக்கப்படும்.

அனைவருக்கும் வங்கி சேவை திட்டத்தின் கீழ், 55 கிராமங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட்டுள்ளன. நத்தபட்டி, வலையபட்டி, காட்டுநாயக்கன்பட்டி உள்ளிட்ட 4 புதிய கிராமங்களை இத்திட்டத்தின் கீழ் ஐஓபி தத்தெடுக்க உள்ளது.

திண்டுக்கல் மண்டலத்தில் ஐ.ஓ.பி. வங்கிக்கு விவசாயக் கடன் வழங்க ரூ. 779.5 கோடி நடப்பாண்டில் இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை ரூ. 780 கோடி கடன் வழங்கப்பட்டு விட்டது. வரும் மார்ச் மாத இறுதிக்குள் மேலும் ரூ.50 கோடி விவசாயக் கடன் வழங்கப்படும். இதே போல் கல்விக் கடனாக திண்டுக்கல் மண்டல அலுவலகம் மட்டும் ரூ.4.5 கோடி வழங்கி உள்ளது. இதைத் தவிர மண்டலத்தில் உள்ள ஐ.ஓ.பி. வங்கிகள் கல்விக் கடன் வழங்கியுள்ளது என்றார் முதுநிலை மண்டல மேலாளர் சி.அன்பு.

பேட்டியின்போது, முதன்மை மேலாளர்கள் எஸ்.எம். ஆனந்த், பி.எஸ். ராஜூ, கோட்டை வங்கி முதுநிலை கிளை மேலாளர் கீதாராணி ஆகியோர் உடனிருந்தனர்.

**தினமலர்**

**சம்பன்குளத்தில் விதை கிராம பயிறு 2010-11 விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,01:24 IST

ஆழ்வார்குறிச்சி: சம்பன்குளத்தில் விதை கிராம திட்டம் பயறு 2010-11 சார்பில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. சம்பன்குளம் சமுதாய நல கூடத்தில் நடந்த தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கான விதை கிராம பயிறு திட்ட பயிற்சி முகாமிற்கு தர்மபுரம்மடம் பஞ்., தலைவர் முகமது இப்ராகிம் தலைமை வகித்தார். நெல்லை வேளாண்ணை துணை இயக்குனர் (மாநில திட்டங்கள்) துரைபாண்டி முன்னிலை வகித்து பேசினார். ஆழ்வார்குறிச்சி துணை வேளாண்மை அலுவலர் தவசிஆசாரி வரவேற்றார். விவசாயிகளுக்கான விதை கிராம திட்டம் பற்றி வேளாண்மை துணை இயக்குனர் (மத்திய அரசு திட்டங்கள்) குமாரசாமி, ஆலங்குளம் விதைசான்று அலுவலர் சிவகுருநாதன் ஆகியோர் பயிறு சாகுபடி பற்றி பேசினர். கடையம் வேளாண்மை உதவி இயக்குனர் ராஜசேகர் திட்ட விளக்கவுரை ஆற்றினார். ஆழ்வார்குறிச்சி உதவி வேளாண்மை அலுவலர் முத்துசிதம்பரநாதன் செயல் விளக்கத்துடன் பேசினார். எம்.எஸ்.நாதன் நன்றி கூறினார்.

**வேளாண்மை கணக்கெடுப்பு கள ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,00:46 IST

கழுகுமலை:கழுகுமலை அருகேயுள்ள குருவிகுளம் அரசுப்பள்ளி என்எஸ்எஸ் திட்டத்தின் சார்பில் வேளாண்மை கணக்கெடுப்பு களஆய்வு நடந்தது. கழுகுமலை அருகேயுள்ள குருவிகுளம் மேல்நிலை பள்ளி என்எஸ்எஸ் திட்டத்தின் சார்பில் வேளாண்மை புள்ளிவிபர கணக்கெடுப்பு களஆய்வு பணிகள் நடந்தது. என்எஸ்எஸ் திட்ட அலுவலர் சுப்பாராஜூ தலைமையில், மாணவர்கள் என்எஸ்எஸ் திட்ட கரிசல் வட்டாரத்தை சுற்றி சுமார் 30 கிமீட்டர் சுற்றளவில்

பணிகள் நடந்தது. இதில் விவசாயிகள் பயிரிட்டுள்ள பயிர் வகைகள், தாக்கும் பூச்சி நோய்கள், பயன்படுத்தும் இயற்கை மற்றும் செயற்கை உரங்கள், பூச்சி பூசாண களைக்கொல்லி மருந்துகள், மகசூல், மழையளவு, வானிலை மாற்றம் ஆகிய ஆய்வுகள் நடந்தது. வீட்டுமனைகளாகும், விளை நிலங்கள் குறித்தும், இக்கால இளைஞர்களுக்கு விவசாயப்பணிகள் மீது விழிப்புணர்வு ஏற்படுத்தவும் களஆய்வு நடந்தது. என்எஸ்எஸ் திட்ட மாணவர்களின் வேளாண்மை குறித்த களஆய்வு பணிகளை பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட பலர் பாராட்டினர்.

**விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,00:45 IST

தூத்துக்குடி:எட்டயபுரத்தில் உள்ள நடுவிற்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்கப்பட்டது. எட்டயபுரத்திலுள்ள நடுவிற்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு மழையால் சேதமடைந்த பயிருக்கான நிவாரண தொகை ரூ.24லட்சம், 539 பேருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டுறவு கடன் சங்கத்தில் வைத்து தமிழக அரசின் முதன்மை செயலர் ஸ்வரன்சிங் 5 நபர்களுக்கு நிவாரண தொகையாக ரூ.24 ஆயிரம் வழங்கினார். நிகழ்ச்சியில் கோட்ட வளர்ச்சி அலுவலர் ரவிச்சந்திரன், தூத்துக்குடி மண்டல இணைப்பதிவாளர் முருகன், கூட்டுறவு வங்கி தனிஅலுவலர் பாண்டியன், தாசில்தார் துரைப்பாண்டி ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மாசிப்பட்ட பருத்தி சாகுபடியாளர்களின் கவனத்திற்கு...**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,00:00 IST

கோடைப்பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்ய இருக்கும் விவசாயிகள் அதிக மகசூல் பெற கீழ்க்காணும் தொழில் நுட்பங்களை கடைபிடிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
* சம வயதுள்ள ரகத்தை யாவரும் தேர்ந்தெடுத்து ஏக காலத்தில் (ஒரு வாரத்திற்குள்) விதைத்திட வேண்டும். * இயன்றவரை பூச்சிநோய் தாங்கி வளரவல்ல எஸ்விபிஆர் 2 ரகத்தைத் தேர்ந்தெடுத்து பயிரிட வேண்டும். * சாணிப்பால் கொண்டு விதைநேர்த்தி செய்து நிழலில் உலர்த்த வேண்டும். * பின் விதைப்பதற்கு சற்று முன்பாக ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் பயன் படுத்தி விதைநேர்த்தி செய்யவும். * காற்றடிக்கும் திசைக்கு குறுக்காக பார்கள் / வரிசைகள் அமைத்து விதைத்தால் மருந்தடிக்கும் போது மருந்துக் கலவை வீணாகாமல் தடுக்க உதவும். * வயலைச் சுற்றிலும் உள்ள செடிகள், களைகளை (பூச்சிகளுக்கு மாற்றுணவாகப் பயன்படும்) அகற்றி சுத்தமாக வைக்க வேண்டும். * தொழு உரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு

இடுவது பூச்சி மற்றும் நோய் (வேரழுகல், வாடல், நூற்புழு, தண்டுக்கூன்வண்டு, தரைக்கூன் வண்டு, வேர்ப்புழு) தாக்குதலை குறைக்கும். * விதைத்த 30வது நாளில் சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (ஏக்கருக்கு ஒரு கிலோ) இடுவது வேரழுகல், வாடல் நோய் தாக்குதலைக் குறைக்கும். * நட்ட 20 மற்றும் 30ம் நாள் வேப்பெண்ணெய் 1 சதம் கரைசல் தூரில் ஊற்றுதல் தண்டுக்கூன் வண்டு தாக்குதலைக் குறைக்கும். * ஊடுபயிராக வாய்க்கால்கள் மற்றும் பாத்தி வரப்புகளின் ஓரங்களில் தட்டைப்பயிறு வளர்த்தால் பொறி வண்டுகள் பெருக்கத்திற்கு துணைபுரியும். * மேலும் பூச்சியின் வருகையை கண்காணிக்க ஊடுபயிராக மக்காச் சோளம், உளுந்து மற்றும் சீனி அவரை (கொத்தவரை) ஓரப் பயிராக சோளம், ஆமணக்கு, சூரியகாந்தி பயிரிட வேண்டும். * இரட்டை வரிசையில் பருத்தியை பயிரிட்டு இடைவெளியில் ஒரு வரிசை உளுந்து அல்லது சீனி அவரை ஊடுபயிராக பயிரிடலாம்.

வயலைச் சுற்றி அரண் போன்று சோளம் நெருக்கமாக (உயரமாக வளரும் ரகம்) வளர்க்க வேண்டும். (தத்துப்பூச்சி, இலைப்பேன்கள், வெள்ளை ஈ, மாவுப்பூச்சி மற்றும் காய்ப்புழுவின் அந்துகள் வயலினுள் நுழைவதைத் தடுக்க).

சீனி அவரை ஊடுபயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி மற்றும் காய்ப்புழு தாக்குதல் குறையும். மேலும் இந்த பயறுவகை ஊடுபயிர்கள் மூலம் வேர் முடிச்சுகளில் தழைச்சத்து உற்பத்தி செய்யப்பட்டு மண்ணின் வளம் மேம்படுகிறது.

வயலைச் சுற்றி ஆமணக்கு பயிரிட்டு புரடீனியாப் புழு முட்டைகளைச் சேகரித்து அழிக்கலாம். ஆமணக்கு புரடீனியா புழு தாய்ப்பூச்சிகளை முட்டையிட கவர்ந்திழுக்கும்.

வெண்டை, ஆமணக்கு மற்றும் சூரியகாந்தி பயிர்கள் முறையே புள்ளிக்காய்ப்புழு, புரடீனியா மற்றும் அமெரிக்கன் காய்ப்புழு தாக்குதலைக் கவர்ந்திழுக்கும். அப்பூச்சிகளை அங்கேயே கட்டுப்படுத்தி விடவேண்டும்.

ஊடுபயிராக வாய்க்கால்களில் மக்காச்சோளம் பயிரிட கிரைசோபா, குளவிகள் போன்ற நன்மை தரும் பூச்சிகளின் பெருக்கத்திற்கு துணை செய்யும்.

வாய்க்கால் வரப்புகளில் ஆங்காங்கே வெண்டை பயிரிட்டு சொத்தைக் காய்களைப் பறித்து அகற்ற வேண்டும்.

ந.முருகேசன், பேராசிரியர் மற்றும் தலைவர்,பருத்தி ஆராய்ச்சி நிலையம்,ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

**நடவு முறை துவரை சாகுபடி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,00:00 IST



ஆடிப்பட்டம், புரட்டாசிப்பட்டம் மற்றும் கோடைப்பருவகாலங்களில் துவரை பொதுவாக சாகுபடி செய்யப்பட்டாலும், ஆடிப்பட்டத்தின் சாகுபடி பரப்பு அதிகமாக உள்ளது. நடைமுறை சாகுபடியில் விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகள் நேரடி விதைப்பாக உழவு சால்களில் விதைக்கப்பட்டு வருகிறது. ஆனால் கர்நாடக மாநிலத்தில் துவரையை நாற்றுவிட்டு நடவு செய்து நல்ல விளைச்சல் கண்டு வருகின்றனர்.

**முக்கிய நடவுமுறை சாகுபடி நுட்பங்கள்:** துவரை நடவு செய்வதற்கு 3 வாரங்களுக்கு முன் நன்கு மக்கிய எருவை ஏக்கருக்கு 5 டன் அல்லது மண்புழு உரம் ஏக்கருக்கு 2.5 டன் என்ற அளவில் இடப்படுகிறது. இறவை மானாவாரியில் தனிப்பயிர் சாகுபடிக்கு 15 செ.மீ. அளவுள்ள குழிகளை 5' x 3 அடி இடைவெளியிலும் (2904 செடிகள்/ஏக்கர்) நடவுப்பயிர் சாகுபடி செய்யக்கூடிய இடங்களில் 6' x 3 அடி இடைவெளியிலும் (2420 செடிகள்/ஏக்கர்) குழிகள் எடுக்கப்படுகின்றன. நாற்றங்காலுக்கு 1 கிலோ விதை மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஒரு கிலோ விதையை 0.2 சதம் கால்சியம் குளோரைடு (20 கிராம்/லிட்டர்) கரைசலில் ஒரு மணி நேரம் ஊறவைத்து பின் 7 மணி நேரம் நிழலில் உலர்த்தப்படுகிறது. இவ்விதையினை 100 கிராம் ரைசோபியம், 100 கிராம் பாஸ்போ பாக்டீரியா ஆகிய உயிர் உரங்கள், டிரைகோடெர்மா (10 கிராம்/ கிலோ) பூஞ்சாணத்துடன் கலந்து விதைநேர்த்தி செய்யப்பட்டு விதைக்கப் படுகிறது. மணல், மண், எரு ஆகியவற்றை சம அளவில் கலந்து 200 மைக்ரான் அளவுள்ள பாலிதீன் பைகளில் (6" x 4'') நிரப்பி விதைக்கப் பயன்படுத்தப் படுகின்றன. பைகளில் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க 3-4 துளைகள் போடப்படுகின்றன. பின் விதைநேர்த்தி செய்யப்பட்ட விதைகளை ஒரு பைக்கு ஒரு விதை என்ற அளவில் ஒரு செ.மீ. ஆழத்தில் விதைத்து ஒவ்வொரு நாளும் தண்ணீர் தெளித்து பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு விதைப்பு செய்யப்பட்ட பைகள் நிழலான இடங்களில் வைத்து 30-40 நாட்கள் பராமரிக்கப்பட்டு நடவுக்கு பயன்படுத்தப் படுகின்றன. நடுவதற்கு சில நாட்களுக்கு முன் இளம் வெயிலில் நாற்றுக்களை வைத்து கடினப்படுத்தி பின் நடவு செய்வது நல்லது.

**நடவுமுறை:** நாற்றுக்களை நடுவதற்கு 15 நாட்களுக்கு முன் குழிகளை மண், எருவைக் கொண்டு நிரப்பி ஒரு குழிக்கு ஒரு செடி வீதம் நடவு செய்யப்படுகின்றன. ஊடுபயிர் செய்யும் இடங்களில் நடவுக்கு முன் உளுந்து, பாசிப்பயறு, சோயாமொச்சை போன்ற பயிர்களை விதைத்து பிறகு நடவு மேற்கொள்ளப்படுகின்றது. நடவு செய்தவுடன் நீர்ப்பாசனம் செய்யப் படுகிறது. பின் மண்ணின் ஈரத்திற்கேற்ப 3-4 முறை பாசனம் செய்யப்படுகின்றது. நடவு செய்த 30-40 நாட்கள் வரை களையின்றி பராமரிக்கப்படுகிறது. நடவுப்பயிர்களில் கிளைகள் அதிக எண்ணிக்கைகளில் தோன்றுவதால் செடிகள் சாயாமல் இருக்க மண் அணைத்து பராமரிக்கப்படுகிறது.
**உர நிர்வாகம்:** நடவு நட்ட 20 முதல் 30 நாட்கள் கழித்து மண் அணைப்பதற்கு முன் ஏக்கருக்கு 10:23:50 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்களை அளிக்கும் வகையில் டி.ஏ.பி., பொட்டாஷ் உரங்களும், துத்தநாகம், கந்தகச் சத்து அளிக்கும் துத்தநாக சல்பேட் (10 கிலோ) உரங்களும் செடியைச் சுற்றி இடுவதால் நல்ல விளைச்சல் கிடைக்கிறது.
நடவு செய்த 20-30 நாட்கள் கழித்து 5-6 செ.மீ. அளவுக்கு நுனி குருத்தைக் கிள்ளி விடவேண்டும். பூ உதிராமல் தடுக்க பிளானோபிக்ஸ் ஊக்கியை பூக்கும் காலத்தில் 0.5 மி.லி./லிட்டர் தண்ணீர் பயன்படுத்த வேண்டும். சோள விதைகளை துவரை வயலில் விதைத்து பறவைகள் அமர்வதற்கு ஏதுவாக வழிவகை செய்வது பூச்சிக் கட்டுப்பாட்டிற்கு நல்ல பலனைக் கொடுக்கிறது. (**தகவல்:** பா.கலைச்செல்வன், செ.தே.சிவகுமார், விரிவாக்கக் கல்வி இயக்ககம், தமிழ்நாடு வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. 0422-661 1522)

**வறட்சியிலும் வளம் தரும் சந்தனம் குமிழ் மலைவேம்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,00:00 IST

சந்தன மரங்களை இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் சுதந்திரமாக வளர்க்க அரசின் அனுமதி உண்டு. தனியார் நிலங்களில் வளர்க்கப்படும் சந்தன மரங்களை அறுவடை செய்திட மாவட்ட வனத்துறையிடம் அனுமதி பெற வேண்டும். அறுவடை செய்த சந்தன மரக்கட்டைகளை வனத்துறையினர் நடத்தும் ஏலத்தின் மூலம் நல்ல விலைக்கு விற்பனை செய்யலாம். தனியாருக்கும் விற்பனை செய்யலாம். 20% தொகையை அரசுக்கு வரியாக செலுத்த வேண்டும். எனவே விவசாயிகளும் பொதுமக்களும் விவசாய நிறுவனங்களும் ஆர்வமுடன் சந்தன மரங்களை வளர்க்க முன்வந்துள்ளனர்.
சந்தன மரங்கள் வேலிகளிலும் தரிசு நிலங்களிலும் இயற்கையாகவே வளர்ந்து வறட்சியிலும் பசுமையாக காட்சிதரும் அழகிய தெய்வீக மரமாகும். இந்தியாவின் அனைத்து நிலப்பகுதிகளிலும் அனைத்து தட்பவெப்ப நிலைகளிலும் வளம் குன்றிய பாறை நிலங்களிலும் செழிப்புடன் வளரும் தன்மை கொண்டது. சந்தன மரங்களை வீடுகளிலும் பூங்காக்களிலும் விவசாய நிலங்களிலும் பள்ளி, கல்லூரி, தொழிற்சாலை, கோயில் வளாகங்களிலும் வளர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழல் மேம்பாடு அடைவதுடன் 12 ஆண்டுகளுக்குப் பின் பலகோடி ரூபாய் அன்னியச் செலாவணியை

ஈட்ட முடியும்.

விவசாயமாகச் செய்வதெனில் 3 மீட்டர் இடைவெளியில் சிறு குழிகள் அமைத்து ஏக்கருக்கு 450 சந்தன மரங்களை வளர்க்க முடியும். சந்தன மரங்கள் மற்ற வகை மரங்களுடன் இணைந்து வளரும் தன்மை கொண்டது. எனவே இரண்டு சந்தன மரங்களின் மையப்பகுதியில் குமிழ், மலைவேம்பு, மகோகனி, சவுக்கு, செடிமுருங்கை என வேறு வகையான மரங்களை ஏக்கருக்கு 450 மரங்கள் வளர்க்க முடியும். தென்னை, பெருநெல்லி, சப்போட்டா, பேரீட்சை, முந்திரி, மா என பல வகையான தோப்புகளில் ஊடுபயிராகவும் வளர்க்கலாம்.

ஒரு கிலோ சந்தன மரக்கட்டை 6000 ரூபாய் வரை வனத்துறையினர் நடத்தும் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 15 ஆண்டுகள் வளர்ந்த ஒரு சந்தன மரத்தின் மூலம் 30 ஆயிரத்திற்கு மேல் வருமானம் கிடைக்கும். ஊடுபயிராக வளர்க்கப்படும் மரங்களின் மூலம் தனி வருமானம் பெறலாம்.

எனவே இனி சந்திலும் பொந்திலும் சந்தனம் வளர்ப்போம். முடிந்தால் சந்திர மண்டலத்திலும் சந்தனம் வளர்ப்போம். இந்நாள் இதனை செய்திடுவோம். 2020ல் அதனை நறுமணமாய்ப் பெற்றிடுவோம். ஒரு மனதாய் வளர்த்திடுவோம் சந்தனத்தை, சுகவனமாய் அமைத்திடுவோம்... இந்தியத் திருநிலத்தை, கலாமின் கனவை நனவாக்குவோம். தரிசு நிலங்களையும் தங்கம் விளையும் பூமியாக்குவோம். சந்தனம், குமிழ், மலைவேம்பு, மகோகனி, ஈட்டி, சில்வர் ஓக், சிவப்பு சந்தனம், அசோலா மற்றும் பலவகையான வன மரக்கன்றுகளும், விதைகளும் வளர்ப்பு முறை ஆலோசனைகளும் ஆய்வக முகவரியில் தொடர்பு கொண்டு பெறலாம். 98429 30674.

ஏ.சந்தனமோகன்,சந்தன வளர்ச்சி ஆய்வு பண்ணை கந்தன்பாளையம், காமநாயக்கன்பாளையம் பல்லடம், கோயம்புத்தூர்-641 658.

**சின்ன சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 09,2011,00:00 IST



**மஞ்சளுக்கு எளிய அறுவடை இயந்திரம்:** இதுவும் ஒரு விவசாயியின் கண்டுபிடிப்பு. அவர் தன் பண்ணையில் உள்ள பவர் டில்லருடன் இணைக்கும் வகையில் மஞ்சள் அறுவடை இயந்திரத்தை தயார் செய்துள்ளார். இதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழககத்துடன் பண்ணை இயந்திரவியல் துறையில் ஆலோசனை பெற்றுள்ளார். இயந்திரத்தின் மூலம் ஒரு நாளில் 2 ஏக்கர் அறுவடை செய்ய முடியும் என்கிறார் விவசாயி. இவ்வியந்திரத்தின் அடக்கவிலை ரூ.5000/-. இதனை பயன்படுத்துவதன் மூலம் மஞ்சள் அறுவடைச் செலவு ரூ.7500 ஏக்கருக்கு என்ற அளவில் குறைகிறது என்று தெரிவிக்கிறார் விவசாயி. இதுவரை உழவர்களுக்கு 12 இயந்திரங்களை விற்பனை செய்துள்ளார். **தொடர்புக்கு: பி.ராமராஜ், புதுப்பாளையம், செட்டிசமுத்திரம் அஞ்சல், பவானி, ஈரோடு. 98651 71790. (தகவல்: ந.சாத்தையா, பா.கலைச்செல்வன், தி.மனோகரன், வேளாண் அறிவியல் நிலையம், திண்டிவனம், விரிவாக்க கல்வி இயக்ககம், த.வே.பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-641 003)**

**பண்ணைக்கழிவுகளைத் துளாக்கும் சாதனம்:** இது ஒரு விவசாயியின் கண்டுபிடிப்பு. தன்னுடைய தென்னந்தோப்பில் விழும் பட்டைகளை உரமாக்குவதற்கும் அவற்றை வெட்டி தூளாக்குவதற்கும் மற்றும் வாழைத்தண்டுகளை வெட்டி தூளாக்குவதற்கும் ஏற்பதன் முயற்சியில் 35 குதிரைத்திறன் கொண்ட டிராக்டர் பவரில் மின்சாரத்தில் இயங்கக்கூடிய வகையில் சாதனத்தை உருவாக்கிஉள்ளார். இந்த சாதனத்தில் 6 கடின வெட்டுக் கத்திகள் உந்து சக்தியால் இயக்கப் பட்டு ஈர நிலையில் இருக்கும் கழிவுகளை பொடியாக்குகின்றன. மொத்த எடை 325 கிலோ ஆகும். இதன் பலனாக விவசாயி தன் பண்ணையிலேயே இயற்கை உரம் தயாரிக்க முடிந்தது. மண்புழு உரம் தயாரிப்பதற்கும் இக்கழிவுகள் உகந்தவையாகவும் இருந்ததால் மறுசுழற்சிக்கு மற்ற பண்ணைக்கழிவுகள் தேவைப் படவில்லை என்கிறார் விவசாயி. இச்சாதனத்தின் விலை ரூ.1 லட்சம். **தொடர்புக்கு: கே.நடராஜன், உதவிப்பாளையம், பொள்ளாச்சி தாலுகா, கோயம்புத்தூர்.**

**தென்னையில் ஊடுபயிர் கோகோ:** வளர்ந்த தென்னை, பாக்கு, பாமாயில் தோட்டங்களில் ஊடுபயிர் செய்ய ஏற்றது. ஆண்டுதோறும் அதிக பணம் தருவது; நட்ட 3 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை பலன். ஏக்கருக்கு நிகர லாபம் ரூ.24,000/- அரசு மானியம் எக்டருக்கு ரூ.20,000/-. **மேலும் விபரங்களுக்கு இலவச தொலைபேசி எண்: 1800 - 103 - 5303. தொலைபேசி எண்: 04253-281 031. தொடர்பு கொள்ள** வேண்டிய முகவரி: கேட்பரி இந்தியா லிமிடெட், சென்னக்கல் பாளையம், தலைவாய்பட்டினம், தாராபுரம்-638 672.
-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம் வேளாண் அதிகாரி வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,22:42 IST

சிறுபாக்கம் : மங்களூர் நல்லூர் ஒன்றியங்களில் மக்காச்சோள விவசாயிகள் இடைத் தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம் என வேளாண் அதிõகரிகள் எச்சரித்துள்ளனர். இதுகுறித்து கடலூர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் தனவேல், விருத்தாசலம் கோட்ட அலுவலர் அமுதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மங்களூர் மற்றும் நல்லூர் ஒன்றியங்களில் தற்போது மக்காச்சோளம் அறுவடை நடந்து வருகிறது. விவசாயிகள் தங்கள் மக்காச்சோளத்தினை எவ்வித இடைத் தரகர், வியபாரிகள் குறுக்கீடு இல்லாமல் நேரடியாக சுகுணா கோழி தீவன நிறுவனம் மூலம் விற்பனை செய்து அதிக லாபம் பெறலாம். அதற்காக தொடர் நடவடிக்கைகளை மாவட்ட வேளாண் விற்பனை துறை எடுத்து வருகிறது.

இதன்படி சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள வீரகனூரில் சுகுணா கோழி தீவனம் நிறுவனம் 5,000 டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் அமைத்து கடந்த 2ம் தேதி முதல் நேரடியாக கொள்முதல் செய்து வருகிறது.
உள்ளூர் விலையை விட கூடுதல் விலையில் சரியான எடையுடன் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் இடைத் தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம் என எச்சரிக்கிறோம். மேலும் விவரங்களுக்கு சுகுணா நிறுவன விற்பனை பிரிவு மேலாளர் ரவிக்குமார் மொபைல் 9865690980 எண்ணிலும், கோட்ட வேளாண் அதிகாரி அமுதா மொபைல் 9443095440 எண்ணிலும் தொடர்பு கொள்ள கேட்டு கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**புதிய முறையில் கரும்பு நடவு: விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,22:42 IST

நெல்லிக்குப்பம் : நெல்லிக்குப்பத்தில் புதிய முறையில் கரும்பு நடவு செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். நெல்லிக்குப்பம் பகுதியில் தனியார் ஆலைக்கு சப்ளை செய்யும் கரும்பு விவசாயிகள் தற்போது சிறந்த தொழில் நுட்பத்தை கடைப்பிடிக்கத் துவங்கியுள்ளனர். பிளாஸ்டிக் டிரேயில் ஒரு பரு கரணைகள் 6,000த்தை எரு, மண், தேங்காய் நார் கழிவு கலந்து நடவு செய்ய வேண்டும். 25 நாட்கள் கழித்து முளைத்த கரும்பின் நுனியை கத்தரித்து விட்டு நிலத்தில் நடவு செய்ய வேண்டும். நுனியை கத்தரிப்பதால் அதிகளவு கரும்புகள் வரும். ஐந்தடி கால் வெட்டி ஒவ்வொரு கரும்புக்கும் இடையே இரண்டடி இடைவெளி விட்டு நடவு செய்தல் வேண்டும். இம்முறை நடவுக்கு 3,000 இரு பரு கரணைகள் மட்டும் போதும். 25 நாளில் நடவு

செய்வதால் ஒருமுறை களை எடுக்கும் பணி குறையும். இயந்திரங்களை பயன்படுத்த முடியும். குறைவான ஆட்களில் குறைவான செலவில் அதிக மகசூல் கிடைக்கும் என்பதால் இம்முறையில் கரும்பு நடவு செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். முள்ளிகிராம்பட்டு ராமலிங்கம் நிலத்தில் நடைபெற்ற இம்முறை நடவை ஆலை விரிவாக்கத் துறை தலைவர் பாலுசாமி பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.

**வேளாண் பொறியியல் துறையினரின் நீர் மேலாண்மைத் திட்ட பயிலரங்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,22:37 IST

திட்டக்குடி : திட்டக்குடியில் வெலிங்டன் நீர்த்தேக்கத் திட்டம், விழுப்புரம் கோட்ட வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பாசனப்பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மைத் திட்ட பயிலரங்கம் நடந்தது. விழுப்புரம் செயற்பொறியாளர் பழனிசாமி முன்னிலை வகித்தார். உதவி செயற் பொறியாளர் நீதிச்செல்வன் வரவேற்றார். விழுப்புரம் கோட்ட வேளாண் பொறியியல் துறை கண்காணிப்பு பொறியாளர் லோகநாதன் தலைமை தாங்கி, வேளாண் உற்பத்தி மற்றும் நீர், மின் சிக்கனம் குறித்து பேசினார்.

முன்னதாக நவீன வேளாண் கருவிகள் குறித்து கடலூர் உதவி செயற்பொறியாளர் பாண்டியன், மானாவாரி பயிர்கள் குறித்து விருத்தாசலம் தோட்டக்கலை மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ஜீவா, நீர் சிக்கனத்தில் மக்குச் சத்தின் பங்கு குறித்து பூச்சியியல் இணை பேராசிரியர் டாக்டர் செல்வராஜ் பேசினர். மேலும், நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களின் நோக்கமும், பயன்களும் குறித்து சிதம்பரம் உதவி பொறியாளர் நாகநாதன், செம்மை நெல் சாகுபடி குறித்து வேளாண் துணை அலுவலர் பரமசிவம், கரும்பு உற்பத்தி குறித்து இறையூர் அம்பிகா சர்க்கரை ஆலை அதிகாரி டாக்டர் சிவநேசன் பேசினர். உதவி பொறியாளர்கள் இளநிலை பொறியாளர் மற்றும் பாசன சங்கத் தலைவர்கள் உட்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலையத்தில் தொழில்நுட்ப திறன் வளர்க்கும் பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,22:45 IST

திண்டிவனம் : திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கான தொழில்நுட்ப திறன் வளர்க்கும் பயிற்சி முகாம் துவங்கியது. திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் மாவட்டத்தில் நபார்டு வங்கியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. பயிர்களின் வளர்ச்சியில் பூஸ்டர் மற்றும் டானிக்குகளின் பங்கு என்ற தலைப்பில் மூன்று நாட்கள் பயிற்சி முகாம் துவங்கியது. துவக்க

விழாவிற்கு திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் முனைவர் ராமமூர்த்தி தலைமை தாங்கினார்.

இப்பயிற்சியில் பூஸ்டர் மற்றும் டானிக்குகளின் முக்கியத்துவம், பயறுவகை பயிர்கள் மற்றும் நிலக்கடலை உற்பத்தில் உண்டாகும் இடர்பாடுகள், பயிர்களில் நுண்ணூட்டச் சத்து மேலாண்மை மற்றும் பயிர்வினை ஊக்கிகளின் பங்கு குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. பயிர்களில் ஒருங்கிணைந்த நுண்ணூட்டச் சத்து மற்றும் பேரூட்டச் சத்து மேலாண்மை, பயிர்களில் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளும், நிவர்த்தி முறைகளும், பயறுவகை பயிர்கள் மற்றும் நிலக்கடலையில் பூஸ்டர் அளிக்கும் முறை பற்றி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. நபார்டு வங்கியின் உதவி பொதுமேலாளர் உமாமகேஸ்வரராவ், வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சாத்தையா, பயிற்சி ஒருங்கிணைப்பாளர் தமிழ்ச்செல்வி, உதவிப் பேராசிரியர்கள் ராதாக்கிருஷ்ணன், அன்புமணி உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

**மலிவு விலை பொருள் ரேஷனில் விநியோகம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,23:49 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட ரேஷன் கடைகளில் விற்பனை செய்யப்படும் பாமாயில், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு ஆகியவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் குறைந்த விலையில் அவற்றை வாங்கி பயன் பெறலாம்.
கலெக்டர் அருண்ராய் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ் செயல்படும் ரேஷன் கடைகளில் சிறப்பு பொதுவிநியோக திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்படும் பாமாயில், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு ஆகியவற்றின் விலைகளை குறைத்து அரசு அறிவித்துள்ளது. ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும், ஒரு கிலோ துவரம்பருப்பு, உளுந்தம் பருப்பு 30 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும். குறைக்கப்பட்ட விலையில் இவற்றை பொதுமக்கள் வாங்கி பயன்பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பருத்தி விளைச்சல் அதிகரிக்க விவசாயிகளுக்கு "சைகா' பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,22:35 IST

கோவை: தமிழகத்தில் பி.டி., ரக பருத்தி, அதிக விளைச்சலை கொடுப்பதற்காக, தென்னிந்திய பருத்தி சங்கம் (சைகா) சார்பில், விவசாயிகளுக்கு பயிற்சியும்,நேரடி கள செய்முறை விளக்கமும் அளிக்கப் பட்டது. இதில் "மான்சான்ட்டோ' நிறுவன தென்மண்டல மேலாளர்கள் செந்தில்குமார், ராஜசேகர், ரமேஷ்பாபு ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து பேசியதாவது:
மான்சான்ட்டோ நிறுவனம் புதியதாக பி.டி.ரகத்தில் உயர் விளைச்சலை கொடுக்கும் பிரம்மா பி.ஜி.2, சுதர்சன் பி.ஜி.2, அட்டல் பி.ஜி.2, மேக்ஸ்காப் பி.ஜி.2 ஆகிய நான்கு ரகங்களை அறிமுக்கப்படுத்தியுள்ளது. இவை நான்கும் அதிக நோய் எதிர்ப்புத்தன்மை கொண்டது;அதிக விளைச்சலை கொடுக்கும். விதைத்து 150 நாட்கள் முதல் 200 நாட்களுக்குள் அதிக விளைச்சலை கொடுக்கும். சாதாரண ரகங்களை காட்டிலும் மேற்சொன்ன நான்கு ரகங்களும் அதிக விளைச்சளை கொடுக்கும். சாதாரண நீண்ட இழை பருத்தி பயிர் செய்தது முதல் பருத்தி பறிப்பு வரை 8 முதல் 10 முறை பூச்சி மருந்து அடித்து செடிகளை பாதுகாக்க வேண்டும். இந்த ரக பருத்தி செடிகளுக்கு மூன்று முறை மட்டும் மருந்துகளை தெளித்தால் போதும். ஒரு ஏக்கருக்கு சாதாரண பருத்தி வகைகள் 18 முதல் 20 குவின்டால் வரையை விளைச்சலை கொடுக்கும். ஆனால், இந்த ரகம் 30 குவின்டால் முதல் 40 குவின்டால் வரை விளைச்சல் தரும்.
தமிழகத்தில் 4 லட்சம் பேல் முதல் 5 லட்சம் பேல் வரை மட்டுமே பருத்தி உற்பத்தியாகிறது (ஒரு பேல் 170 கிலோ). தமிழகத்தில் உள்ள மில் களுக்கு 100 லட்சம் பேல் முதல் 105 லட்சம் பேல்கள் வரை தேவைப்படுகிறது. இவ்வாறு, அவர்கள் கூறினர்.பயிற்சியில் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். முதலில் பயிற்சியும், பின்னர் கள செயல் முறை விளக்கமும் அளிக்கப்பட்டது. தென்னிந்திய பருத்தி சங்க அலுவலக வளாகத்திலுள்ள 65 சென்ட் நிலத்தில் தலா 15 சென்ட்டாக பிரித்து, நான்கு பருத்தி ரகங்களையும் பயிர் செய்திருந்தனர். ஏற்பாடுகளை தென்னிந்திய பருத்தி சங்கம் (சைகா) செய்திருந்தது.

## ராஜராஜன்-1000 அறுவடை துவங்கியது

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,22:16 IST

வெள்ளகோவில்: வெள்ளகோவில் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த ராஜராஜன்-1000 நெல் அறுவடை துவங்கியுள்ளது. இதர நெல் சாகுபடிகளை விட, அதிக நெல்மணிகள் பிடித்துள்ளதால், நல்ல மகசூல் கிடைக் கும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள் அறுவடை பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ராஜராஜன்-1000 சாகுபடியை ஊக்குவிக் கும் வகையில், வேளாண் துறைசார்பில் செயல்விளக்க திடல் அமைத்து, விவசாயி களுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. வெள்ளகோவில் வட்டாரத்தில் வெள்ள கோவில், வாய்க்கால்மேட்டுவலசு, முத்தூர் பகுதிகளை சேர்ந்த 25 விவசாயிகள், வேளாண் துறையால் தேர்ந்தெடுக்கப்பட் டனர்.

இவ்விவசாயிகள், தங்கள் நிலங் களில் செயல்விளக்க திடல் அமைத்து, ராஜராஜன்-1000 முறையில் சாகுபடி செய்தனர். வெள்ளகோவில் வட்டாரத்தில் 1,000 ஏக்கர் பரப்பில் செயல்விளக்க திடல் அமைத்து ராஜராஜன் பயிரிடப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டர் நிலத்தில் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் 3,000 ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. மார்க்கர் கருவி மூலம், 22 செ.மீ.,க்கு ஒரு நாற்று என்ற முறையில் நடவு செய்தனர். நடவு செய்து பத்தாவது நாள், கோணார் வீடர் கருவியால் களை எடுக்கப்பட்டு, நெற்பயிரின் பக்கவேர்கள் வெட்டப் பட்டன. இதனால், மற்ற பயிர்களை விட அதிகளவு பக்க தூர்பிடித்து, கூடுதல் நெல் மணிகள் விளைந்தன. கடந்த அக்., - நவ., மாதங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர் கள், தற்போது அறுவடை நடந்து வருகிறது. விவசாயிகள் கூறியதாவது: ஐ.ஆர்., 20, கோ 43 ரகங்கள் வெள்ள கோவில் பகுதியில் அதிகளவு பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இந்த ரகங் களில் பயிர் செய்யும்போது ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 கிலோ நெல் கிடைக் கிறது. ராஜராஜன் 1000 முறையில் நடவு செய்து, களைக்கருவி மூலம் பயிரின் பக்க வேர்கள் வெட்டப்பட்டதால், தூர் அதிகம் பிடித்தன. தற்போது அறுவடை பணிகள் நடந்து வருகின்றன. கதிர் அதிகளவு வந்துள்ள நிலையில், மற்ற பயிர்களைவிட ராஜ ராஜன் நெல் சாகுபடியில் 5,000 முதல் 7,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும் வாய்ப் புள்ளது. பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி கள் அதிகளவு பயன்படுத்த வேண்டி இல் லாததால், இதர ரகங்களைவிட ராஜராஜன் 1000 லாபம் தருவதாக அமையும், என்றனர்.

**புதிய தொழில்நுட்பத்தை ஏற்க ஆதிவாசி விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,22:03 IST

குன்னூர்:விவசாயத்தில் புதிய தொழில்நுட்பத்தை ஏற்று, செயல்படுத்த ஆதிவாசி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், விவசாயத்தில் ஈடுபடும் ஆதிவாசி விவசாயிகளுக்கான ஐந்து நாள் பயிற்சி முகாம் குன்னூர் தோட்டக்கலை துறை மூலம் நடத்தப்பட்டது. "உபாசி' வேளாண் அறிவியல் நிலைய ஒத்துழைப்புடன், "உபாசி' அரங்கில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில், குன்னூர் அருகே நெடுகல்மந்து, கீழ் கோத்தகிரி, திருச்சிகடி, கேத்தி கொல்லிமலை உட்பட கிராமங்களில் இருந்து 50 ஆதிவாசி ஆண், பெண் விவசாயிகள் தங்களின் பாரம்பரிய உடையுடன் பங்கேற்றனர்.தேயிலை, காபி, மல்பெரி, காய்கறி சாகுபடி, காளான் வளர்ப்பு, பட்டு வளர்ப்பு உட்பட பல விவசாய, சாகுபடி முறை குறித்து, சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் விளக்கினர். நிறைவு நாள் நிகழ்ச்சிக்கு, தோட்டக்கலை துறை இணை இயக்குனர் தேவராஜ் தலைமை வகித்தார். துணை இயக்குனர் ஹால்துரை, உதவி இயக்குனர் குணசேகரன், துணை வேளாண் அலுவலர் ராஜன் முன்னிலை வகித்தனர். உபாசி வேளாண்

அறிவியல் நிலைய திட்ட இயக்குனர் குமாரவடிவேலு, தொழில்நுட்ப வல்லுனர் சண்முகம் பேசுகையில், ""வளர்ந்து வரும் தொழில்நுட்பம், சந்தை நிலவர மாற்றம், தோட்டத் தொழிலில் ஆட் பற்றாக்குறை உட்பட காரணங்களால் பழைய தொழில்நுட்ப விவசாய முறையில் இருந்து வெளியே வந்து, புதிய நவீன தொழில் நுட்பங்களை கையாள வேண்டும். ஆதிவாசி விவசாயிகளுக்கு, நவீன தொழில்நுட்ப விவசாய முறைகள் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன; அவற்றை ஏற்று, செயல்படுத்த வேண்டும்,'' என்றனர்.

**விலை வீழ்ச்சியால் விவசாயிகள், வியாபாரிகள் வேதனை : மாவட்டத்தில் மூடை, மூடையாய் நெல் தேக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,23:35 IST

வத்திராயிருப்பு : நெல் விலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதால் விவசாயிகளும், வியாபாரிகளும் கலக்கம் அடைந்துள்ளனர். வியாபாரிகள் வாங்க வராததால் நெல் மூடைகள் களங்களிலேயே தேங்கி கிடக்கிறது. மாவட்டத்தில் ராஜபாளையம், சேத்தூர், தேவதானம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு உள்ளிட்ட மேற்குப் பகுதிகளில் 30 ஆயிரம் ஏக்கர்களுக்கும் அதிகமாக, நெல் விவசாயம் நடந்து வருகிறது. வழக்கமாக டிசம்பர் மாதத்திற்குள், அறுவடை பணிகள் முடிந்துவிடும். ஆனால், இம்முறை பருவமழை தாமதத்தால், ஒருமாதத்திற்கு மேல், தாமதமாகவே நடவுப்பணிகள் துவங்கின. அறுவடை நேரத்தில் மழை பெய்து வயல்கள் சதுப்பு நிலமாக இருந்ததால், அறுவடை இயந்திரங்கள் வயலுக்குள் செல்ல முடியவில்லை. இது அறுவடை பணிகளை, மேலும் தாமதமாக்கியது. இந்நிலையில் பொங்கல் பண்டிகை வந்துவிட்டதால் அதன்பிறகே விவசாயிகள் அறுவடையை துவக்கினர். விலை வீழ்ச்சி: அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் அறுவடை நடந்ததால் வியாபாரிகளுக்கும், அரவை ஆலைகளுக்கும் அதிக நெல்வரத்து இருந்தது. இதனால் அறுவடையின் துவக்கத்திலேயே நெல் விலை கடும் வீழ்ச்சியடைந்தது. கடந்த பருவகால அறுவடையின் போது 1,140 ரூபாய் வரை விலை போன 72 கிலோ மூடை டீலக்ஸ் பொன்னி நெல் இப்போது 815 ரூபாயாக வீழ்ச்சியடைந்தது. கடந்த மூன்று நாட்களாக விலை மேலும் வீழ்ச்சியடைந்து 760 ரூபாய்க்கு இறங்கியுள்ளது. இது விவசாயிகளையும், வியாபாரிகளையும் கலக்கமடையச் செய்துள்ளது. களங்களில் தேக்கம்: அரசு கொள்முதல் நிலையங்களில் ஈரப்பதம், தரம் பார்த்து பிரித்து கொள்முதல் செய்வதால் அரசு நிர்ணயித்துள்ள முழுமையான விலை கிடைப்பதில்லை.
மேலும் அங்கு கொண்டு செல்ல வாகன வாடகை, நெல் மூடைகளை ஏற்றி இறக்கும் கூலி என பல செலவுகளை கணக்கிட்டுப் பார்த்து விவசாயிகள் சிரமமின்றி நெல்லை களத்திலேயே

வியாபாரிகளிடம் விற்று விடுகின்றனர். ஆனால் தற்போதைய விலை வீழ்ச்சியால் நெல் கொள்முதல் செய்ய வேண்டி அறுவடைக்கு முன்பே, விவசாயிகளிடம் அதிக விலைக்கு அட்வான்ஸ் கொடுத்த வியாபாரிகள், கொள்முதல் செய்ய செல்லாமல் உள்ளனர். வியாபாரிகள் நெல்லை வாங்க வராததால், விவசாயிகளும் நெல்லை இருப்பு வைக்க இடவசதியின்றி களங்களிலேயே இருப்பு வைத்து காத்திருக்கின்றனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## பப்பாளியில் மாவூப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த 300 கிராமங்களில் 65 ஆயிரம் ஒட்டுண்ணிகள் வினியோகம் பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்

*கோவை, பிப்.9–*

*பப்பாளியில் உள்ள மாவூப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த இதுவரை 300 கிராமங்களில் 65 ஆயிரம் ஒட்டுண்ணிகள் வினியோகம் செய்யப்பட்டு உள்ளது என்று வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.*

*மாவூப்பூச்சி தாக்குதல்*

*பப்பாளியில் மாவூப்பூச்சியை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்துதல் குறித்த கருத்தரங்கு சத்தியமங்கலத்தை அடுத்த அக்கரை தத்தப்பள்ளி கிராமத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கி கருத்தரங்கை தொடங்கி வைத்து 100–க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக ஒட்டுண்ணிகளை வழங்கி பேசினார் அப்போது அவர் கூறியதாவது:–*

*ஒட்டுண்ணிகள்*

*இன்றைய நிலையில் பப்பாளியில் மாவூப்பூச்சியின் தாக்குதல் பப்பாளி மட்டுமல்லாது காட்டாமணக்கு, மரவள்ளி, பருத்தி, பழ மரம் மற்றும் காய்கறி போன்ற 70–க்கும் மேற்பட்ட பயிர்களை தாக்கி சேதம் ஏற்படுத்தி உள்ளன. இந்த மாவூப்பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த அமெரிக்க நாட்டில் இருந்து ஒட்டுண்ணிகள் கொண்டுவரப்பட்டு வேளாண் பல்கலைக்கழகத்தில் பெருமளவு உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக விணியோகம் செய்யப்பட்டு வருகிறது.*

*இதற்காக பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகள் வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் மையங்கள் மூலமாகவும் இவை வழங்கப்பட்டு வருகின்றன. இது வரை 300–க்கும் மேற்பட்ட கிராமங்களில் 65 ஆயிரம் ஒட்டுண்ணிகள் விடப்பட்டு பப்பாளியில் மாவூப்பூச்சியின் தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது.*

*பூச்சி கொல்லி பயன்பாடு*

*இவ்வாறு விடப்பட்டு உள்ள ஒட்டுண்ணிகள் வேகமாக பரவி மற்ற விளைநிலங்களுக்கும் செல்கின்றன. இதன் காரணமாக இதன் பயனை ஒட்டுண்ணிகள் விடாத விவசாயிகளும் பயன் பெற்று வருகின்றனர். இதன் காரணமாக சுற்றுச்சூழல் மாசுபாடு, பூச்சி கொல்லிகளால் ஏற்படும் எஞ்சிய நஞ்சுகள் விளைபொருட்களின் மீது தங்குவதினால் ஏற்படும் பிரச்சினைகள் குறைந்து உள்ளன. இந்த ஒட்டுண்ணிகள் சிறப்பாக செயல்படுவதால் விவசாயிகளிடையே சிறந்த வரவேற்பை பெற்று உள்ளது. இந்த முறை மிகப்பெரிய சாதனையை ஏற்படுத்தி சுமார் ரூ.48 கோடி அளவுக்கு பூச்சி கொல்லிகளின் பயன்பாட்டை குறைத்து உள்ளது. ஒட்டுண்ணிகள் விடப்படும் விளைநிலங்களின் பூச்சி கொல்லிகளின் உபயோகத்தை கைவிடுவதால் இவை மேலும் பெருகுவதற்கு வழிவகை கிடைக்கும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*விழாவில் வேளாண் தேசிய மைய இயக்குனர் ரபீந்திரா, பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் ஜோனாத்தன், பதிவாளர் சுப்பையன், பப்பாளி நிறுவன முதன்மை ஆலோசகர் ரகுபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

## உலகிலேயே, வாழை உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது விவசாயிகள் பயிற்சி முகாமில் தகவல்

*கூடலூர், பிப்.9–*

*உலகிலேயே வாழை உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிப்பதாக கூடலூரில் நடந்த பயிற்சி முகாமில் தோட்டக் கலை ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியை வசந்தா தகவல் தெரிவித்துள்ளார்.*

*விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி முகாம்*

*தோட்டக்கலை துறை மூல மாக 2010–2011–ம் ஆண்டுக் கான தேசிய தோட் டக்கலை இயக்கத்திட்டத்தின் கீழ் நீல கிரி மாவட்டத்தில் உள்ள பல் வேறு பகுதிகளிலும் விவசாயி களுக்கு தொழில் நுட்ப பயிற்சி மற்றும் செயல் விளக்கமும் நடத்தப்பட்டு*

வருகின்றன. கூடலூர் தோட்டக்கலை துறையின் மூலம் கூடலூர் வட்டார விவசாயிகளுக்கு பயிற்சியுடன் கூடிய செயல் விளக்கம் கூடலூர் மரப்பாலத் தில் நேற்று தொடங்கியது. இது வருகிற 12–ந் தேதி வரை நடக்கிறது.

இதையொட்டி முதல் நாள் பயிற்சியில் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் தமிழ் மணி தலைமையில் விவசாயி களுக்கு பயிற்சி அளிக்கப்பட் டது. பயிற்சியில் ஊட்டி தோட்டக்கலை ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் வசந்தா கலந்து கொண்டு வாழை விவசாயம் குறித்து செயல் முறை விளக்கம் அளித் தார். அப்போது தோட்டக் கலை ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் வசந்தா கூறிய தாவது:–

இந்தியா முதலிடம்

வாழை விவசாயத்தில் உலக அளவில் இந்தியா முதலி டத்தை வகித்து வருகிறது. வாழை பழங்கள் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உடல் நலத்தை கொடுக்கிறது. வாழை பழங்கள் குழந்தை களுக்கு வயிற்று பிரச்சினை, எலும்பு வளர்ச்சி, கண்பார்வை, நார்சத்துக்களை அதிகரிக் கிறது.

வைரசால் உண்டாகும் நோய்களை கட்டுபடுத்த முடியாது. ஆகையால் வைரஸ் நோய்களால் பாதிக்கப்பட்ட செடிகளை கண்டு அழித்து விட வேண்டும். வாழையின் திசுவை எடுத்து பரிசோதித் தால் நோய் தாக்கியுள்ளதா? என தெரிந்து விடும்.

நேந்திர வாழைக்கு மவுசு

நேந்திர வாழைக்கு உலக அளவில் மிகுந்த வரவேற்பு உள்ளது. ஆகையால் இங் குள்ள நேந்திர வாழை விவ சாயிகள், நேந்திரன் வாழைப் பழங்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய் தால் நல்ல வருமானம் ஈட்ட முடியும். அரபு நாடுகளில் நேந்திர வாழைகளுக்கு நல்ல மவுசு உள்ளது. இதனால் கேரள மாநிலத்தில் உள்ள ஏற்றுமதி நிறுவனங்களை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் வாழை விவசாயத்தில் சொட்டு நீர் பாசனத்தை பயன் படுத்தலாம். இதனால் கூடுதல் நீர் தேவையை தவிர்க்கலாம். இவ்வாறு அவர் கூறினார். பின்னர் மண்மாதிரி எடுத்தல் குறித்து அஜியும், வேளாண் விற்பனை பற்றி அலுவலர் ரமேசும், மலைப்பகுதி மேம் பாட்டு திட்ட பணிகள் பற்றி பழனிச்சாமியும் விவசாயி களுக்கு எடுத்துரைத்தனர்.

முகாமில் தோட்டக்கலை அலுவலர் சுரேஷ், கிடங்கு மேலாளர் ராமசாமி, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் சுப்பன், அம்பிராஜ், ராதா கிருஷ்ணன் ஆகியோர் உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

# எகிப்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் உரம் உற்பத்தி குறையும்?



ஹரிஷ் ராவ்

மும்பை

எகிப்து மற்றும் துனிசியா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, நாட்டின் உர உற்பத்தி பாதிக்கப்படலாம் என்ற அச்சப்பாடு நிலவுகிறது. ஏனென்றால், இந்திய நிறுனங்கள், உரங்களை மேற்கண்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகின்றன.

யூரியா

உலகின் யூரியா உர உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் எகிப்து நாட்டின் பங்களிப்பு முறையே 3 சதவீதம் மற்றும் 8 சதவீதமாக உள்ளது. பாஸ்பேட் உரங்கள் தயாரிக்க பயன்படும் பாஸ்பேட் ராக் உற்பத்தியில் உலக அளவில் துனிசியாவின் பங்களிப்பு 4.4 சதவீதமாக உள்ளது. பல இந்திய நிறுவனங்கள், துனிசியாவிலிருந்து பாஸ்பேட் ராக் மற்றும் இதர உரங்களை இறக்குமதி செய்து வருகின்றன.

மேற்கண்ட நாடுகளில் ஏற்பட்டுள்ள கலவரம் தொடர்ந்து நீடித்தால்தான் பாதிப்பு ஏற்படும் என்றும், குறுகிய கால அடிப்படையில் இந்திய உரத்துறையில் இது தாக்கத்தை ஏற்படுத்தாது என்றும் உர தயாரிப்பு நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரி தெரிவித்தார். ஏனென்றால், இந்திய நிறுவனங்கள் உரங்களை ஓரளவிற்கு இருப்பு வைத்துள்ளன.

உணவு பணவீக்கம்

நாட்டின் உணவு பொருள் பணவீக்கம் அதிகரித்து வரும் நிலையில், மேற்கண்ட நிகழ்வுகளால், உரம் விலை உயர்ந்தால், அது மத்திய அரசுக்கு ஒரு சவாலாக அமைந்துவிடும். மத்திய அரசின் உரமானியச் சுமையும் அதிகரிக்கும்.

சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில், ஊட்டச் சத்து அடிப்படையிலான மானித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து, உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு பொட்டாசிக்

மற்றும் பாஸ்போரிக் உரங்களின் விலையை நிர்ணயிப்பதில் உள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அதேசமயம், யூரியா விலைக்கு கட்டுப்பாடு உள்ளது.
விவசாயிகள் பயன்படுத்தும் மொத்த உரங்களில் யூரியாவின் பங்களிப்பு 50 சதவீதமாக உள்ளது.
நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில், நம் நாட்டில், யூரியா மற்றும் டீ.ஏ.பி. உரங்கள் பயன்பாடு முறையே 2.60 கோடி டன் மற்றும் 1.10 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
சென்ற சில மாதங்களாக உர தயாரிப்பு நிறுவனங்களின் பங்குகளின் விலை குறைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டில் இந்த ஆண்டு 2 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் ஆற்காடு வீராசாமி அறிவிப்பு

சென்னை, பிப்.9–
தமிழ்நாட்டில் இந்த ஆண்டு 2 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று சட்டசபையில் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அறிவித்தார்.
சட்டசபையில் நேற்றைய கேள்வி நேரத்தின் போது நடந்த விவாதம் வருமாறு:–
புதிய மின் மோட்டார்கள்
ஜி.கே.மணி (பா.ம.க.):– விவசாயிகளுக்கு புதிய மின் மோட்டார் வழங்குவதில் குளறுபடி உள்ளது. இது சரி செய்யப்படுமா?
அமைச்சர் ஆற்காடு வீராசாமி:– இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் தமிழகத்திலேதான் 10 ஆண்டுகளுக்கு முன்பு பதிவு செய்த விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கவேண்டும் என்று முதல்–அமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார். இதற்கான பணி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. புதிய மின் மோட்டார்கள் 3 ஸ்டார் 4 ஸ்டார் கொண்ட மின் மோட்டார்கள் வாங்குவதற்கு ஏற்கனவே மின்வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. தற்போது தேவையான மின்மோட்டார்கள் கைவசம் இருக்கின்றன. எனவே தொடர்ந்து மின் இணைப்பு கொடுக்கப்படும்.
புதிய மின் மோட்டார்கள் வழங்குவதில் உள்ள பிரச்சினையை சரி செய்ய 5 பொறியாளர்களை கலந்துபேசி விவாதித்து, பிரச்சினை வராமல் இருக்கும் மோட்டார்கள்தான் வாங்கவேண்டும் என்று முடிவெடுத்து அந்த

*மோட்டார்களைத்தான் வாங்குகிறார்கள். இதில் ஏதாவது பிரச்சினை இருந்தால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.*

*2 லட்சம் பம்பு செட்டுகளுக்கு*

*ஓ.பன்னீர்செல்வம் (அ.தி.மு.க.):– தமிழகத்தில் மின் இணைப்பு கேட்டு பதிவு செய்த விவசாயிகள் எத்தனை பேர் உள்ளனர்? மின்சார பற்றாக்குறையை சரி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?*

*அமைச்சர் ஆற்காடு வீராசாமி:– ஒரு ஆண்டுக்கு 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குத்தான் மின் இணைப்பு வழங்கப்படுகிறது. அப்படி கொடுப்பது என்றால் பல ஆண்டுகள் ஆகிறது. ஏற்கனவே மின்சார வாரியத்தில் 5 லட்சம் விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டுள்ளனர். இதை விரைவில் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்திலேதான் முதல் கட்டமாக இந்த ஆண்டு 2 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்று முதல்–அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இதோடு சேர்த்து ஆண்டுக்கு 40 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுக்கப்படும்.*

*100 புதிய பஸ்கள்*

*வசந்தகுமார் (காங்கிரஸ்):– நாங்குநேரி தொகுதிக்கு 25 புதிய பஸ்கள் தருவதாக கூறியதில், 15 பஸ்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மீதி பஸ்களை உடனே வழங்க வேண்டும். தேசிய நெடுஞ்சாலையில் மதுரையில் இருந்து நெல்லை செல்லும் பஸ்கள் கிராம பகுதிகளில் நிற்பது இல்லை. எனவே எனது தொகுதியில் கூடுதல் பஸ்கள் இயக்கப்படுமா?*

*அமைச்சர் நேரு:– சுற்றுலாத்துறை அமைச்சர் சுரேஷ் ராஜன் வேண்டுகோளுக்கு இணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் 100 புதிய பேருந்துகள் விடஇருக்கிறோம். அப்படி வரும்போது நாங்குநேரி தொகுதியில் புதிய பேருந்துகள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய நெடுஞ்சாலையில் ஓடும் பேருந்துகளை இடையில் நிறுத்தி, நிறுத்தி சென்றால், நேராக நீண்டதூரம் செல்லும் பயணிகள் அரசு பஸ்களில் ஏறுவது இல்லை. தனியார் பேருந்துக்கு சென்றுவிடுகிறார்கள். எனவேதான் இடையில் இருக்கும் ஊர்களுக்கு நகர பேருந்துகள் இயக்கப்படுகிறது.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*

## சின்னியம்பாளையத்தில் ரோட்டில் பாலை கொட்டி போராட்டம் ஆவின் பால் வினியோகம் பாதிப்பு



ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே விவசாயிகள் நடுரோட்டில் பாலை கொட்டி ஆர்ப்பாட்டம் செய்த போது எடுத்த படம்.

ஈரோடு, பிப்.9–

சின்னியம்பாளையத்தில் நேற்று பால் உற்பத்தியாளர்கள் ரோட்டில் பாலை கொட்டி போராட்டம் நடத்தினர். போராட்டம் தீவிரம் அடைந்து இருப்பதால் ஆவின் பால் வினியோகம் பாதிப்பு அடைந்து உள்ளது.

வேலை நிறுத்த போராட்டம்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நல சங்கம் சார்பில் பால் விலையை உயர்த்த வேண்டும், பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் வேலைநிறுத்த போராட்டம் அறிவிக்கப்பட்டது. அதன்படி நேற்று முன்தினம் பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தை தொடங்கினார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் பல இடங்களில் ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டம் நடந்தது. குறிப்பாக பால் உற்பத்தியாளர்கள் யாரும் பால் கூட்டுறவு சங்கங்களில் பால் விற்பனை செய்ய முன்வரவில்லை. இதனால் பால் கொள்முதல் 20 சதவீதமாக குறைந்தது.

2–வது நாளாக...

இந்த நிலையில் 2–வது நாளாக நேற்றும் பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தை தொடர்ந்தனர். ஈரோட்டை அடுத்து உள்ள சின்னியம்பாளையம் நால்ரோட்டில் அந்த பகுதி விவசாயிகள் போராட்டம் நடத்தினர்.

நேற்று காலை சுமார் 9.30 மணி அளவில் சின்னியம்பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் சிலர் தங்கள் பசுமாடுகளுடன் சின்னியம்பாளையம் பால் கூட்டுறவு சங்க அலுவலகத்துக்கு வந்தனர். யாரும் பால் விற்பனை செய்யவில்லை.

பாலை கொட்டினர்

சுமார் 10 மணிக்கு மாடுகளுடன் ஊர்வலமாக வந்த பால் உற்பத்தியாளர்கள், சின்னியம்பாளையம் நால்ரோடு பகுதிக்கு வந்தனர். தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ஈ.ஆர்.குமாரசாமி தலைமையில் விவசாயிகள் சாலை மறியல் செய்ய முயன்றனர்.

ஆனால், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த ஈரோடு டவுன் துணை போலீஸ் சூப்பிரண்டு சுரேஷ்குமார், போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர் சிவக்குார் மற்றும் போலீசார் தடுத்தனர். ஆனால், போராட்டத்துக்கு வந்த விவசாயிகள் தாங்கள் கொண்டு வந்திருந்த சுமார் 20 லிட்டர் பாலை தார் ரோட்டில் கொட்டினர். உடனடியாக போலீசார் விரைந்து வந்து போராட்டம் நடத்திய 12 விவசாயிகளை கைது செய்தனர். அவர்கள் கொண்டு வந்த பசுமாடுகள் வீடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டன.

இந்த சம்பவத்தால் சின்னியம்பாளையம் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

கோபி பகுதியில்

பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் சார்பில் கோபி பகுதிகளில் நேற்று 2–வது நாளாக வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி உற்பத்தியாளர்கள் நேற்று முன்தினம் கோபி அருகே உள்ள கொளப்பலூரில் பொதுமக்களுக்கு இலவசமாக பால் வினியோகம் செய்யும் போராட்டத்தை நடத்தினார்கள். அதுபோல், நேற்றுக்காலையும் பால் உற்பத்தியாளர்கள் இலவசமாக பால் வினியோகம் செய்யும் போராட்டம் நடத்தப்போவதாக போலீசுக்கு தகவல் கிடைத்தது. அதன்பேரில், சிறுவலூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) மணிமாறன் தலைமையில் 15–க்கும் மேற்பட்ட போலீசார் கொளப்பலூர் பஸ்நிறுத்தத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். காலை 6½ மணியளவில் பால் உற்பத்தியாளர்கள் சங்க ஈரோடு மாவட்ட துணைத்தலைவர் ராமகிருஷ்ணன் தலைமையில் விவசாயிகள் கொளப்பலூர் பஸ்நிறுத்தத்தில் பொதுமக்களுக்கு இலவசமாக பால் வினியோகம் செய்தனர்.

கொளப்பலூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் நேற்று முன்தினம் குறைந்த அளவிலான விவசாயிகள் விற்பனைக்காக பாலை கொண்டு வந்தனர். ஆனால் நேற்று

*யாரும் பாலை கொண்டு வரவில்லை. இதேபோல் கோபி அருகே உள்ள கரட்டடிபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திலும் யாரும் பாலை விற்பனைக்கு கொண்டு வரவில்லை.*

*பால் வினியோகம் பாதிப்பு*

*ஈரோடு ஆவின் நிறுவனத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் 724 பால் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் பெரும்பாலான கூட்டுறவு சங்கங்களில் நேற்று உற்பத்தியாளர்கள் யாரும் பால் விற்பனை செய்யவில்லை. 272 கூட்டுறவு சங்கங்கள் மூலம் நேற்று காலை 24 ஆயிரத்து 927 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது. வழக்கமாக 2 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்த நிலையில், நேற்று வெறும் 25 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு இருப்பதால், ஆவின் நிறுவனம் சார்பில் பொதுமக்களுக்கு பால் வினியோகம் செய்வது கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.*

*எனவே பால் கொள்முதலை அதிகரிக்க ஆவின் நிர்வாக அதிகாரிகள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு உள்ளனர்.*

சென்னிமலை

*சென்னிமலையில் பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது நடுரோட்டில் பாலை கொட்டி கோஷம் எழுப்பினார்கள். ஆர்ப்பாட்டம் செய்த 67 பேரை போலீசார் கைது செய்தனர்.*